

போர்ட்டர் கந்தன்

நரசு ஸ்டுடியோஸ்

# போர்ட்டர் கந்தன்

## நடிகர்கள்

| | | |
|---|---|---|
| எம். கே. ராதா | ... | கந்தன் |
| எம். கே. முஸ்தபா | ... | வீரப்பன் |
| கே. துரைஸ்வாமி | ... | ஸ்டேஷன் மாஸ்டர் |
| டி. பாலசுப்ரமண்யம் | ... | ஆபீஸர் |
| எஸ். வி. சுப்பையா | ... | கிழவன் |
| டி. எஸ். துரைராஜ் | ... | சாமி |
| எம். என். நம்பியார் | ... | சம்பத் |
| மாஸ்டர் பாஜி | ... | ரங்கன் |
| ஜி. முத்துகிருஷ்ணன் | ... | பிராஸிகியூட்டர் |
| டி. கே. சம்பங்கி | ... | டாக்டர் |

## நடிகைகள்

| | | |
|---|---|---|
| ஜி. வரலட்சுமி | ... | வள்ளி |
| டி. பி. முத்துலட்சுமி | ... | ரஞ்சிதம் |
| ஆர். லலிதா | ... | ராதா |
| பேபி மஹேஸ்வரி | ... | லீலா |
| ராஜாமணி | ... | நர்ஸ் |

ஓ

| | | |
|---|---|---|
| கதை | ... | செங்கையா |
| வசனம் | ... | சாண்டில்யன்<br>எம். எஸ். கண்ணன்<br>கோ. த. ச. |
| பாடல்கள் | ... | அ. மருதகாசி<br>அம்பிகாபதி<br>அழ. வள்ளியப்பா |

| | | |
|---|---|---|
| படப்பிடிப்பு | ... | எம். மஸ்தான் |
| ஒலிப்பதிவு | ... | கே. ராமச்சந்திரன் |
| எடிட்டிங் | ... | ஆர். ராஜகோபால் |
| ஆர்ட் டைரக்ஷன் | ... | ஏ. கே. சேகர் |
| மேக்அப் | ... | எம். ராமசாமி<br>ஆர். ரங்கசாமி |
| உடை | ... | பி. பொன்னுசாமி |
| ஸ்டில்ஸ் | ... | ஆர். பி. சாரதி |
| பாலர் நாடக அமைப்பு | ... | கோ.த. சண்முகசுந்தரம் |
| சங்கீத டைரக்ஷன் | ... | விஸ்வநாதன்<br>ராமமூர்த்தி |
| குரல் கொடுத்தவர்கள் | ... | கண்டசாலா<br>திருச்சி லோகநாதன்<br>எஸ். ஸி. கிருஷ்ணன்<br>வி. என். சுந்தரம்<br>ஜிக்கி, ராணி |
| நடனம் | ... | லட்சுமிகாந்தம் |
| நடன அமைப்பு | ... | பி. ஜி. செல்லப்பா<br>பலராமன் |
| புரடக்ஷன் மானேஜர் | ... | கே. பாலாஜி |
| உதவி டைரக்ஷன் | ... | எஸ். ராமநாதன் |

டைரக்ஷன்

# கே. வேம்பு

தயாரிப்பு

# வி. எல். நரசு

# "போர்ட்டர் கந்தன்"

## (கதைச் சுருக்கம்)

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற நம்பிக்கையிலே, வானம்பாடி போல குதூகல வாழ்க்கை நடத்தி வருகிறான் போர்ட்டர் கந்தன். அவன் மனைவி வள்ளி ஒரு குடும்ப விளக்கு. மகன் ரங்கனோ கருணையே உருவெடுத்து வந்தவன்.

திடீரென கந்தனின் வாழ்க்கையில் புயலடிக்க ஆரம்பிக்கிறது. உயிருக்கு உயிராக நேசித்துவந்த அவன் தம்பி வீரப்பன், தீயவர்கள் கூட்டுறவால், கள்ளர் கூட்டத்தில் சேர்ந்து, போலீஸாரால் விரட்டப் படுகிறான்.

பொன்னிலம் ஸ்டேஷனுக்கு அருகேயுள்ள பாலத்தைத் தகர்த்து, இரவில் வரும் மெயில் வண்டியைக் கவிழ்த்து, கொள்ளை அடிப்பதென்று திருடர் கூட்டம் முடிவு செய்கிறது. இதைத் தெய்வாதீனமாக அறிந்துகொள்கிறான் ரங்கன். அன்று இரவு மெயில் வண்டியை நிறுத்தி, அதற்கு ஏற்படவிருந்த விபத்தைத் தடுக்கிறான். அந்த வண்டியில் பிரயாணம் செய்த ரயில்வே அதிகாரி சுந்தரம்பிள்ளையின் பேத்தி லீலா அவனுக்கு ஒரு நெக்லெஸை பரிசளிக்கிறாள்.

ரயில் வண்டியைக் கவிழ்க்க முயன்ற திருடர் கூட்டம் கைது செய்யப்படுகிறது. வீரப்பன் அவர்கள் செயலை ஆமோதிக்காவிட்டாலும், அவர்களோடு கூட இருந்ததால், கைது செய்யப்படுகிறான்.

வீரப்பன், திருடர் கூட்டத்தில் சேர்ந்திருந்ததால், கந்தனுக்கும் அந்தக் கூட்டத்தில் சம்பந்தமிருக்குமென நினைத்த ரயில்வே ஆபீஸர் சுந்தரப்பிள்ளை, அவனை வேலையைவிட்டு "டிஸ்மிஸ்" செய்து விடுகிறார். நிர்க்கதியாக வீதியில் விடப்பட்ட கந்தனின் குடும்பம் பிழைப்புத்தேடி சென்னை செல்கிறது.

சென்னைக்கு வந்த கந்தன், சென்னை ஜோப்படிக்காரர்களில் ஒருவனான சாமியின் நயவஞ்சகப் பேச்சில் மயங்கி, அவன் வீட்டிற்குள் குடிபோகிறான். ஆபீஸர் சுந்தரம் பிள்ளையின் வீட்டு வேலைக்காரியாக வேலை பார்த்து வருகிறாள், சாமியின் மனைவி ரஞ்சிதம். சாப்பாட்டுக்காக கூலிவேலை செய்து பிழைத்து வருகிறான் கந்தன். சாமி ஒருநாள் யாரோ ஒருவரிடம் ஜோப்படி அடிக்க முயன்று முடிவில் அகப்பட்டுக்கொள்ளும் தருணத்திலே, பழியை ரங்கன்மீது சுமத்தி அவனை போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பிவிடுகிறான்.

இந்தச் சம்பவத்தைக் கேட்டு, துடிதுடித்துப்போன கந்தன், சாமியிடம் சண்டைக்குப்போகிறான். சாமியும், சம்பத்தும் சேர்ந்து

கொண்டு, கந்தன் குடும்பத்தை வீட்டைவிட்டு விரட்டுகிறார்கள். போக்கிடமெதுவுமற்ற கந்தன் சென்னை வீதியோரத்திலுள்ள நடைபாதையிலே "உலகம்" என்ற கிழவரின் ஆதரவில் தங்குகிறான்.

சிறையிலிருந்த வீரப்பன், தன் தவறினால் தனது அண்ணனுக்கு வேலை போனதை அறிந்து, சிறையைவிட்டுத் தப்பி, ஆபீஸர் சுந்தரம்பிள்ளை வீட்டில் ஏறிக்குதித்து, தன் அண்ணனுக்கு வேலை வாங்கித்தர முயற்சிக்கிறான். தூக்கத்திலிருந்து மிரண்டெழுந்த சுந்தரம்பிள்ளை, அவனை ரிவால்வரால் சுடுகிறார். வீரப்பன் குண்டுக் காயத்துடன் தப்பி ஓடுகிறான்.

சுந்தரம்பிள்ளை, தன் வீட்டிற்கு வந்தவன் கந்தனே என முடிவு செய்து, போலீஸுக்கு அறிவிக்கிறார். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வேலைக்காரி ரஞ்சிதம் அவர் வீட்டிலிருந்த தங்க வளையல்களைத் திருடிக்கொள்கிறாள். இந்தப் பழியும் கந்தன்மீதுதான் விழுகிறது.

கந்தன் நடைபாதையிலே நோயாகக்கிடக்கும் தன் மகன் ரங்கனின் வைத்யச்செலவிற்குப் பணம் தேடிவர வெளியே புறப்படுகிறான். அவன் சென்றதும், போலீஸ் அவ்விடம் வந்து, வள்ளியைக் கைதுசெய்து செல்கிறது. ரங்கன் ஆபீஸர் வீட்டுக்கு ஓடும் வழியில் கார் விபத்துக்குள்ளாகிறான்.

கார் விபத்தில் சிக்கிய தன் மகனைத் தூக்கிக்கொண்டு போலீஸ் வேட்டையாடலுக்குத் தப்பிவந்த கந்தன், ஒரு ஓடைக் கரையிலே, பிராணபத்தில் கிடக்கும் தன் தம்பி வீரப்பனைப் பார்க்கிறான். ரத்தபாசம் மேலோங்கி, டாக்டரை அழைத்துவர ஓடுகிறான். அவனைப் போலீஸ் கைது செய்துவிடுகிறது. கிழவரான உலகம், வீரப்பனை டாக்டர் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கிறார். கிழவனையும் போலீஸ் கைது செய்து விடுகிறது. யாருமே ஆதரவில்லாமல் நடுத்தெருவில் அனாதையாக விடப்பட்டான் ரங்கன். நிரபராதிகள் போலீஸ் கொட்டடியில் தவிக்கிறார்கள். சாகும் நிலையிலிருந்த வீரப்பன் தன் அண்ணனைக் காப்பாற்றத் துடிதுடிக்கிறான். கந்தனின் விடுதலைக்கு முக்கிய சாட்சியமான துப்பாக்கிக் குண்டை டாக்டர் போக்கடித்துவிடுகிறார். பரிசு கொடுத்த பாவையை, உண்மையைச் சொல்லவிடாமல் தடை செய்கிறார், சுந்தரம் பிள்ளை. ஜோப்படிக்காரனான சாமியும் அவன் தோழன் சம்பத்தும், வெற்றிக் கெக்கலிப்போடு அலைகிறார்கள். இதன் முடிவு என்ன?

வெள்ளித் திரையில் காண்க.

## குகைப் பாட்டு—கோரஸ்

சாகித்யம் : அ. மருதகாசி

பாடியவர் : திருச்சி லோகநாதன், எஸ். ஸி. கிருஷ்ணன், செல்லமுத்து, மாதவன், ராணி

கோ : கொண்டாட்டம். கொண்டாட்டம். பணம்
உண்டானல் வாழ்விலுண்டு கொண்டாட்டம்.

ஆ : பெண்டு பிள்ளைக நல்லாயிருக்க
பெரிய மனுஷன் பேரெடுக்க
திண்டுபோட்டுச் சாஞ்சிருக்க
திருடனுளை போதும் பணம் உண்டானல்...
...கொண்டாட்டம்...

கோ : திண்டாட்டம் அண்ணே திண்டாட்டம்—நம்பளை
சேப்புத்தொப்பிக்காரரோடு,
ஸி. ஐ. டி. கண்டுகிட்டா... திண்டாட்டம்.

பெ : ஆ... திண்ணைத்தூங்கி வீரர்களா.
தண்டச் சோத்துக்காரர்களா. வாங்க... வாங்க...
பயம் வேணுங்க.
நல்ல மனுஷன்போல நடிச்சு காசையும்
கள்ளச் சந்தையிலே குவிச்சு பெரிய
வள்ளல் என்றெல்லோரும் சொல்லவாழும்
மனிதர் வழியிலே நடந்துகொள்ளு
...கொண்டாட்டம்.

(கஜல்) காத்து நுழையாத கற்கோட்டையானலும்
கட்டுக்காவல் ரொம்பக் கச்சிதமாயிருந்தாலும்
பாத்துப்புகுந்து பதுங்கியே தேட்டை போடும்
இந்த
பக்காக் கள்ளன் எதுக்கும்
பயப்படவேமாட்டாண்டி.

ஆ : என்னவேணும் ஏதுவேணும் கேட்டுக்கோ.
இந்தா.
ரண்டாயிரம் ரூபாய் நீயும் வாங்கிக்கோ.

பெ : எங்கே ?. அடிசங்கே. பொடிமட்டே.
விரிச்சுப்பார்த்தாக்கா ஒண்ணுமில்லாத
வெறுமட்டே.

ஆ : அடி, பட்டு. அழகுச்சிட்டு. இந்த
ஐயாகிட்டே இருக்கு அந்த நோட்டு.

பெ : இது கள்ள நோட்டு

ஆ: தங்க பெல்ட்டு.
பெ: வெறுங் இல்ட்டு
ஆ: இந்தா சீப்பு.
பெ: வெறும் டூப்பு.
பொய்யும் புரட்டும் தெரிஞ்ச போதும்
புத்தி ரொம்ப இருந்த போதும்
செய்யுந்தொழிலே திருந்தச்செய்யும்
திறமையோடு கையில் பணம்
உண்டானல்...கோண்டாட்டம்.

**ஸ்டேஷன் மாஸ்டர் வீடு**—ஸ்டேஷன் மாஸ்டர்

சாகித்யம்: "அம்பிகாபதி"
பாடியவர்: **வி. என். சுந்தரம்**

ஆதியாய் உலகுக்கெல்லாம் அன்னையாய் அமர்ந்திட்டாளை
ஜோதியாய் விளங்கும் ஞானச்சுடர் ஒளி முகத்தினளை
கோதிலாப் பெரியோர் சிந்தை குடிகொண்ட தேவிதன்னை
வேதநாயகியை தெய்வ விமலையை பணிகுவோமே.
அன்னை பராசக்தி தன்னைப்பணிந்திடில்
அணுகுமோ தீவினைகள் நம் வாழ்வினில். (அன்னை)
முன்னை அரக்கர் பயம் முழுதும் தவிர்த்த கௌரி
மூலமந்திர ரூபிணி மூவுலக காரணி... (அன்னை)
சத்தியம் நிலைக்கவும் தர்மம் தழைத்திடவும்
தரணிதன்னில் அனைத்தும் ஜெயமாய் விளங்கிடவும்
நித்தியமாக அருள் நெறியில் நமை நிறுத்தி
நிலையான இன்பந்தந்து நிதமும் முன்னேறவல்ல
நிமலி விமலி சங்கரி கருணாகரி
நினைந்து பணியுமடியவர் தமக்கருள்புரி......(அன்னை)

**ரயில் பாட்டு**—பின்னணி சங்கீதம்

சாகித்யம்: **அ. மருதகாசி**
பாடியவர்: **எஸ். ஸி. கிருஷ்ணன்**

எழுதிச்செல்லும் விதியின் கை
எழுதி எழுதி மேற்செல்லும்
அழுதாலும் தொழுதாலும்
அதில் ஒரெழுத்தும் மாறாதே.

வருந்தாதே மனமே—வீணே
வருந்தாதே மனமே
ஒருபோதும் அவனன்றி
ஓரணுவும் அசையாதே... (வருந்தாதே)
இரவும பகலும் மாறித்தோன்றும்
முறையை எண்ணிப்பார்
இலைகள் உதிர்ந்து மீண்டும் தோன்றும்
நிலையை எண்ணிப்பார்
ஒருபோதும் அவனன்றி ஓரணுவும்
அசையாதே... (வரு)
இன்பம் துன்பம் யாவுமீசன் செயலே ஆகுமே
இகழ்ந்தவாயே புகழ்ந்து பேசகாலம் மாறுமே
ஒருபோதும் அவனன்றி ஓரணுவும்
அசையாதே... (வரு)

## சைகிள் பாட்டு—கோரஸ்

சாகித்யம் : அழ. வள்ளியப்பா
பாடியவர் : ஜிக்கி முதலியோர்

நல்ல நல்ல சேவை நாட்டுக்கு தேவை
நாமிதையின்றே நாடுதல் நன்றே
சொல்வதிலும் அதைச் செய்வதிலும்
மனத் தூய்மையை நாமே அடைவோமே
கல்வியினால் பெரும் அறிவையெல்லாம்—நன்கு
காட்டிடுவோமே நலமிகப் பெறவே... (நல்ல)
எதிர்காலமே இளைஞர்களாலே
எழில்மிகும் ஒளியெனத் திகழ்ந்திடுமே.
யாவரும் சமமே என உணர்வோமே
இதனை நன்றாய் எடுத்துக்கூறிடுவோம்—நாமே
எடுத்துக் கூறிடுவோம்...
தேவைகள் அறிந்து சிறந்திடும் வகையில்
நாமிதையின்றே நாடுதல் நன்றே... (நல்ல)
சிரோங்கவே செயல் புரிவோமே
தினம் இதை மனதினில் நினைத்திடுவோம்
வாய்மையும் அன்பும் மனதினில் ஓங்க
பாரில் நன்றாய் வாழ்ந்து காட்டிடுவோம்—நாமே
வாழ்ந்து காட்டிடுவோம்.

ஆழ்ந்திடும் அறிவால் அறம் தழைத்திடவே
நாமிதை இன்றே—
நாடுதல் நன்றே... (நல்ல)

## ஆபீஸர் வீடு—பாலர் நாடகம்

சாகித்யம் : கோ. த. சண்முகசுந்தரம்
பாடியவர் : பேபி ராஜகுமாரி, கிருஷ்ணவேணி,
பேபி ஜயா முதலியோர்

### கோரஸ்

விடுமுறை...விடுமுறை...விடுமுறை,
பரீட்சையெல்லாம் தீர்ந்து போச்சு
பள்ளிக்கூடம் விடுமுறை... (விடுமுறை)
பெரிய லீவு வந்ததாலே
பெற்றுவிட்டோம் விடுமுறை... (விடுமுறை)
எருமைமாடு என்று நம்மை
ஏசிவந்த வாத்தியார்
எட்டுவாரம் முடியுமட்டும்
ஏங்கி நிற்கவேண்டுமே... (விடுமுறை)
—பலீன் சடுகுடு ஆடலாமா—பகோடாத்துண்டு?
—ஆளு ஒண்ணு குறையுதேடா ஏ அப்பளாக்குடுமி.
—கோபு வர்ராண்டா—கூப்பிடலாமா?
—டேய் இக்கிரிபுக்கிரி கோரி—டே கியாமியாங்கோரி
—அர்ரரே. அலட்சியமாப் போறான் பார்ரா அத்தரிபாச்சா.
கோபு : பள்ளிப்படிப்பு போதும் ஸ்வாமி
பாவக்காயா கசக்குது—பாவக்காயா கசக்குது
பொழுது விடிந்து பொழுது போனால்
புத்தகமும் கையுமாய்
அழுது அழுது அலுத்துப்போனேன்
அய்யோ சாமி முடியலே
எழுதி வச்ச விதியை மாத்தி
எனக்கு வேறு ஜன்மம் தா.
எனக்கு வேறு ஜன்மம் தா.
அசரீரி : பக்தா. உனக்கு என்ன வரம் வேண்டும்
கோபு : பணக்காரனாய் மாறவேண்டும்
பதவிகள் பெறவேண்டும்
வேறென்ன வேண்டும்?... (பணக்)

அசரீரி : அப்படியே ஆகட்டும் தந்தோம்
.........

காரியதரிசி : தால நலவேலபல சாலவல சீலகுல
கோலமிகும் கோக்குமரனே—குட்டிக்
குபேரனே், கொண்டலே, வள்ளலே
வாழ்க. வாழ்க. வாழ்க. வாழ்கவே
... குறையாமல் மாரிபோல் வரையாது வழங்கும்
எம் கொடையாளி நீர் வாழ்கவே...
வாசகசாலைக்கு கட்டிடம் எழுப்பவே
வழங்கவேண்டும் ஓர் நன்கொடை
மற்ற கஞ்சர்களைக்
கெஞ்சினேம். ஒருகாசு
வல்லே. வல்லே. வல்லே. வல்லே. (வாசக)

கோ-மனைவி: வந்ததா ?

கோபு : விபத்து வந்ததே
.........

நடனமாது : கண்டதுண்டோ கோபுபோல்—புவிமேல்
கண்டதுண்டோ கோபுபோல்
கண்டதுண்டோ
கோபு போலே போலே போலே எங்கும்...
(கண்ட)

சினிமாக் : சின்னச் சின்ன பெண்களெல்லாம் சிற்
றெறும்பாட்டம்
சிங்காரமாய்ப் பவனி வரும் சினிமாக் கலைத்
தோட்டம்
தோட்டத்துக்குத் தண்ணி வார்க்க
பணத்துக்கு நான் "ஹன்டிங்"
படம் எடுத்து முடிக்கக் கொஞ்சம்
"பைனன்ஸ்" தான் "வான்டிங்"
பத்து லட்சம் கடன் கொடுத்தால்......ல்...

மனைவி : வந்ததா ?

கோபு : விபத்து வந்ததே,
.........
வர்ருங்கள் வாருங்கள் கை தாருங்கள்—சார்
வாருங்கள் வாருங்கள் உட்காருங்கள்...இந்த

இ. ஆ : வருஷம் வருமானம் வரி லட்ச ரூபாய்

கோபு : ஆ. லட்ச ரூபாயா ?

ஆபீஸர் : சொச்சமும் இருக்குது.

கோபு : ஹா.

மனைவி : வந்ததா ?

கோபு : விபத்து வந்ததே.
காலைத்தூக்க முயற்சி செய்தால்
கண்ணுக்குள்ளே வலிக்குதே—ஐயோ
காதுக்குள்ளே குத்துதே—ஐயய்யோ
காதில் ஏதும் சத்தம் விழுந்தால்
கழுத்துப்பிடரி முறிக்குதே—அம்மா
"ஹார்ட்" இடந்து அலறுதே—அம்மம்மா
"ஹார்ட்" நின்னு போய்விட்டாலே
கண்ணே என்ன பண்ணுவேன் ?...

வேலை : டாக்டர் வர்ராரே—எஜமான்
டாக்டர் வர்ரார்ரே.

கோபு : உயிருக்கு ஆபத்து உண்டா சர்—எனக்கு
உலகத்திலில்லாத வியாதியா ?

டாக் : ஆபத்து இல்லாத வியாதி, நீண்ட
அவதி கொடுக்காத ஆனந்த வியாதி
ஆறேமணி நேரம் போதும்—ஆளை
அரிஹரன் பாதார விந்தத்தில் சேர்க்கும்

கோபு : வந்ததே. விபத்து வந்ததே. விபத்து
வந்ததே.

மனைவி : போகாதீர். போகாதீர். என் கணவா—இந்த
பொல்லாத டாக்டரை நம்பவேண்டாம்.

கோபு : வழிவிடு. வழிவிடு. வழிவிடு.

மனைவி : ஐயிரு திங்களாய் அங்கமெலாம் நொந்து
அருமையாய்ப் பெற்றபிள்ளை பாருமே,
பாருமே, பாருமே.

கோபு : காசியாத்ரை போரேனடா தாண்டவக்
கோனே
(என்) கர்மமெல்லாம் தொலைத்திடவே
தாண்டவக்கோனே.
தாண்டவக்கோனே......தாண்டவக்கோனே.

..........

—என்னடா கல்வி ?
—எதுக்கடா பட்டை ?
—என்னடா கழுத்திலே கொட்டை ?
—மண்ணே வெறுக்கவா ?
—..........., இல்லை.
பெண்ணே ஒதுக்கவா ?

கோரஸ்: ஊரை ஏச்சு வெளிச்சம் போட்டு
ஊனை வளர்க்கும் சோம்பேறி
ஓடடா. ஓடடா. ஓடடா.

கோபு: என் திரு ஓடடா
—ஏதடா ?
—ஓடடா ?
.........
பள்ளிவாழ்க்கை சுகத்தை யெல்லாம் பறி
கொடுத்தேனே
பறிகொடுத்தேனே—மனம்
பரதவித்தேனே
எள்ளளவும் தொல்லையில்லா
ஏக்கமேதும் என்றுமில்லா
பையனாக வாழ்ந்த சுகம் பரகதியாச்சே.
பரகதியாச்சே—என்
பவுசெல்லாம் போச்சே...... (பள்ளி)

அசரீரி: நீ வேண்டுவது யாது ?

கோபு: பழைய பிறவியே பையன் உருவமே.
பழைய பிறவியே பையன் உருவமே.

அசரீரி: அப்படியே தந்தோம்.
.........

கோரஸ்: பள்ளியில் படிக்கும் பருவமே வாழ்வில்
பரமானந்தமடா
—வாழ்வில் பரமானந்தமடா
பயமும் சூதும் பசப்பு மோசமும்
பக்கமே சேராதடா—நம்
பக்கமே சேராதடா
பாரத தேசத்தின் இனி வருங்கால
மன்னர்கள் நாம்தானே
—உயர் மன்னர்கள் நாம்தானே

படிப்பில் அக்கரை செலுத்தியே மனதை
பக்குவம் செய்வோமே—நாம்
பக்குவம் செய்வோமே.

## பிளாட்பாரம் பாட்டு—கிழவர்

சாகித்யம் : அ. மருதகாசி
பாடியவர் : "கண்டசாலா"

வினையா? விதியா?—உலகின் சதியா?
வேதனையும் சோதனையும் விளையாடும் இந்தநிலை... (வினை)
ஆசைவலைப் பாசந்தனை—அறிந்திடாத நெஞ்சில்
நேசவிதை விதைத்தவர்கள்—நிலைகுலைந்துவாடும் நிலை...
(வினை)

பாலைவனம் போன்ற மனம்
சோலைவனமாக
பரிந்துவந்து அன்புமழை
பொழிந்தவர்கள் துன்பநிலை... (வினை)
உள்ளமதில் கள்ளமில்லா
உத்தமர்கள் தமையே
கள்ளர் கொலைகாரரென்று
கைவிலங்கு பூட்டியது... (வினை)

—★—

இந்தப் படத்தின் பாடல்களை
H. M. V.
ரிகார்டுகளில் கேளுங்கள்.

சாந்தி பிரஸ், சென்னை-1


போர்ட்டர்
கந்தன்